www.tamilarangam.net

# பொலநறுவை முஸ்லீம்கள்

# படுகொலை

# கோழைகளின் கொலை வெறிச் செயல்

23 — 10 — 92 அன்று பொலநறுவை மாவட்டத்தில் முஸ்லீம்கள் வாழும் கிராமங்கள் மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலினால் 183 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கானோர் படுகாயமுற்றனர். அக்பர்புரம், அகமட்புரம், பள்ளியகொடல, பம்புராண ஆகிய கிராமங்கள்தான் புலிகளின் மனித வேட்டைக்கு இலக்காயின. கொலையுண்டவர்களில 38 பெண்களும் 18 பச்சிளம குழந்தைகளும் அடங்குவர்.

இத்தகைய கோரத்தனமான படுகொலைகளை புரிவதன் மூலம் புலிகள் சாதிக்க முனைவது என்ன? தமிழ் மக்களின் விடுதலைக்காக தாம் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் புலிகள் அப்பாவி முஸ்லீம் கிராமவாசிகளை படுகொலை செய்வதன் மூலம் தமிழ் மக்களுக்கு கூற வருவதும் என்ன? சிங்கள பேரினவாத அரசின் இன ஒடுக்குமுறைக்குகெதிராகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள், அதே பேரினவாத அரசால் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லீம்களை புலிகள் நரபலி வேட்டையாடுவதை எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்?

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல கறைபடிந்த அத்தியாங்களை எழுதிய "பெருமை" புலிகளைச் சாரும். சகவிடுதலைப் போராளிகளை வீதிகளில் கொன்று குவித்து ரயர் போட்டுக் கொழுத்தியவர்கள், சொந்த மக்களையும், ஜனநாயகத்திற்காகவும் மனித உரிமைகளுக்குக்காகவும் குரல் கொடுப்பவர்களையும் தமது வதைமுகாம்களிலும் சிறைகளிலும் அடைத்து சித்திரவதை செய்து கொன்றொழிப்பவர்கள் சொந்த மக்களையே ஆயுத முனையில் நிறுத்தி வைத்திருப்பவர்கள் தமிழ மக்களின் விடுதலைக்காகப் போராடுவதாய்க் கூறிக் கொள்வது எத்தகைய கேலிக்கிடமானது. சொந்த மக்கள் மீதே இத்தகைய கொடூரத்தனங்களை ஏவிவிடும் புலிகளுக்கு முஸ்லீம் மக்களை கொன்றொழிப்பது என்பது புதிய விடயமல்ல.

சிங்கள பேரினவாத அரசின் இனஒடுக்குமுறைக்கு எதிராக தமிழ் மக்கள் போராடிய போதெல்லாம் அவர்களோடு தோளோடு தோள் நின்று போராடிய முஸ்லீம்கள் 1984களிலிருந்து தமிழ் விடுதலை அமைப்புகளின் ஒடுக்குமுறைக்கும் வன்முறைக்கும் பலியாகி வந்தனர். அதன் பின் இந்திய அமைதிப் படையின் கீழ் அடிவருடிகளாக இருந்த தமிழ்க் குழுக்களினால ஒடுக்குமுறைக்குள்ளானார்கள். ஆனால் இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் புலிகள் அனைத்து முஸ்லீம்களையும் அவர்களது சொந்த மண்ணிலிருந்து சொத்துக்கள் அனைத்தையும் சூறையாடப்பட்ட பின் வெறும் கையுடன் விரட்டியடித்தனர். காத்தான்குடி பள்ளிவாசல் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்களின் மீதும் ஏறாவூர் கிராமம் மீதும் தாக்குதல் நடத்தி நூற்றுக்கணக்கில் அப்பாவி முஸ்லீம் மக்களை கொன்று குவித்தனர். இன்று பொலநறுவையில் தமது இரத்தக் கறை படிந்த கைகளை மறுபடியும பதித்துள்ளனர்.

சிறிலங்கா அரச படைகளுக்கு எதிராக போராடி வெல்வதற்கு திராணியற்ற புலிகள் ஆயுதங்கள் ஏதுமற்ற அப்பாவி கிராமவாசிகளையும் பெண்களையும் குழந்தைகளையும் கொன்று குவித்து விட்டு அதைத் தமது சாதனையாகப் பறைசாற்றுகின்றனர். இத்தகைய படுகொலை மூலம் தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் இடையில் விரோதத்தையும் அவநம்பிக்கையையும் வளர்த்து சிங்கள பேரினவாத அரசிற்கெதிரான போராட்டத்தை பின்னடைவு நோக்கிச் கொண்டு செல்கின்றனர். அப்பாவி முஸ்லீம் மக்களை படுகொலை செய்வதன் மூலம்தான், அவர்களின் இரத்தத்தில் நடந்து சென்றுதான் தமிழ் மக்கள் தமது விடுதலையை பெற முடியும் என்றும நம்பினால் அது தற்கொலைக்கு ஒப்பானதாகும். தமிழ் மக்களின் போராட்டத்தோடு முஸ்லீம் மக்கள் எந்தளவிற்கு கைகோர்த்து வருகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் தமிழ் மக்களின் போராட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது. எனவே முஸ்லீம்கள் மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை கண்டிப்பதோடு புலிகளின் இத்தகைய கொலை வெறிப் போக்குகளுக்கு எதிராக ஐக்கியப்பட்டு போராட வேண்டும். ஒன்று மட்டும் நிச்சயமானது. ஒரு தேசிய இனத்தை ஒடுக்கும் இன்னொரு தேசிய இனம் எப்படி சுதந்திரமானதாக நிம்மதியாக வாழ முடியாது என்பதற்கு உதாரணமாக இன்று சிங்கள தேசிய இனம் விளங்குகிறதோ அதேபோல முஸ்லீம் தேசிய சிறுபான்மை இனத்தை ஒடுக்கும் தமிழ் தேசிய இனமும் சுதந்திரமானதாகவோ, நிம்மதியாகவோ வாழ முடியாது.

**தமிழர் வகைதுறைவள நிலையம் — 566, பாராளுமன்ற வீதி, ரொரன்ரோ 929 - 7612**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்